**வாக்குமூலம்–வழக்கு சாட்சி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 3, திருப்பத்தூர்**
**வழக்கு எண் C.C. No. 117/2017**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 08 ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. **2** வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரவிக்குமார் | தொழில் | : | மேஸ்திரி |
| தந்தை/கணவர் பெயர் | : | திரு. பெரிய சஞ்சீவி | ஜாதி | : | |
| ஊர் | : | நீலாவூர் | சமயம் | : | |
| மாவட்டம் | : | திருப்பத்தூர் | வயது | : | 36 |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1-3 |

**தேதி:** 08.08.2025

**அ.சா. 2 : முதல் விசாரணை**

நான் நீலாவூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அசா. 1 எனது உறவினர் ஆவார். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் என் ஊர்காரர்கள். அவர்கள் இன்று ஆஜராகி இருந்தால் அவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலும். கடந்த 2017 வருடம் தேதி மாதம் நினைவில்லை ஒருநாள் காலை 09.00 மணிக்கு நான் வேலைக்கு செல்வதற்காக நீலாவூர் பேருந்து நிறுத்ததிற்கு நான் சென்று கொண்டிருந்தபோது இவ்வழக்கின் 1,2 எதிரிகளும் அ.சா1 ஐ தாக்கி கொண்டிருந்தார்கள். நான் அவர்களை தடுத்து பிரித்து விட்டேன். ஜெயலட்சுமிக்கு முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும், அவருக்கு பல் விழுந்திருந்தது. அந்த பல்லானது கமலா தாக்கியதால் தான் விழுந்துவிட்டது. பின்னிட்டு நான் சம்பவயிடத்தில் இருந்து சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரச்சனை யாரால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சென்றபோது ஜெயலட்சுமியும், சுப்பிரமணியும் நின்று கொண்டிருந்தார்கள் என்றாலும், பிரச்சனை ஏதுமில்லை என்றாலும் சரிதான். நான் சென்றபோது பிரச்சனை முடிந்து விட்டது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.